**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 32/2020**

**Date : 27.01.2026**

**பி.வா.சா. 1 – சேவியர் புஷ்பராஜ்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

நான் தற்போது பரமார்த்தலிங்கபுரத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்திற்கும் பரமார்த்தலிங்கபுரத்திற்கும் சுமார் 5 கி.மீ தூரம் இருக்குமா என்றால் அதற்கு மேல் இருக்கும். வழக்கு பட்டிகை சொத்து தற்போதும் காலிமனையாக தான் உள்ளது என்றால் சரிதான். வழக்கு பட்டிகையை சுற்றி காம்பவுண்டு சுவரோ முள்வேலியோ இல்லை என்றல் சரிதான். வா.சா.ஆ.5 ல் பக்கம் 5 ல் இந்த விடுதலை பத்திரம் எழுதிக்கொடுப்பதற்கு நாங்கள் தங்களிடம் இருந்து எவ்வித தொகையும் இப்போதோ இதற்கு முன்போ பெற்றுக்கொள்ளவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் பணம் கொடுத்தது தான். வழக்குரையை ரத்து செய்ய கோரி மனு எண். 4/2021 நாங்கள் தாக்கல் செய்தோம் அதில் அ.வ.எண்.695/2005 என்ற வழக்கை குறிப்பிட்டுள்ளோம் அது சந்மந்தமான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு நியாபகம் இல்லை.

நான் தாக்கல் செய்துள்ள எதிருரைக்கும், முதல் விசாரணையிலும் மேற்படி தாக்கல் செய்த மனு எண்.4/2021 லும் முன்னுக்குபின் முரணாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு நியாபகம் இல்லை. வழக்கு பட்டிகை சொத்தில் வாதிக்கு தற்போதும் 1/6 அவகாச சொத்து உரிமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தில் வாதியின் பங்கினை பொறுத்து வாதியின் அனுபவத்தை தடைசெய்வதற்கோ வாதிக்கு

உரிமைப்பட்ட 1/6 பங்கினை வேறு நபருக்கு மாற்றிக்கொடுக்க எனக்கு உரிமைக்கிடையாது என்றால் சரியல்ல. வழக்கில் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி முடிக்கப்படுகிறது**.